தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 கன்னி (10-10-1987) 85 காசுகள் (இதழ் எண்: 92)

0 தமிழின மக்களிடம் இந்திய அரசு நடந்து கொள்வது கொடுமை! கொடுமை!!

0 தமிழ் நாட்டில் தமிழரைக் காக்கின்ற அரசாக அமையவில்லையே!

0 இவற்றுக் கெல்லாம் ஒரே விடிவு, தமிழ்நாடு தனியாகப் பிரிவதே!

மிகக் கரவாக, இந்திய அரசு அமைதி ஒப்பந்தம் என்னும் பெயரில், சிங்களக் கொடுங்கோலன் செயவர்த்தனாவுடன், கலந்து பேசி இலங்கைத் தமிழரின் நிலையான அடிமைத் தனத்திற்கு அடிகோலி விட்டது. அங்குள்ள போராளிகள் பல வகையான அரசியல் சூழ்ச்சிகளுக்கும் இடையில் மிகவும் வஞ்சகமாக ஏமாற்றப் பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூட அவர்கள் விரித்த சூழ்ச்சி வலையில். விழுந்து விட்டது என்றால், பேசுவதற்கு வேறு என்ன தான் இருக்கிறது? நிலைகள் எல்லாமும் தலைகீழாக மாறி விட்டன. அமைதிப் படை என்னும் பெயரால், இந்தியப் படையினர் வலிவான போர்க்கருவிகளுடன், ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் இலங்கை மண்ணில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகளில் தேக்கிவைக்கப் பெற்றுள்ளனர். **அமைதியை நிலைநாட்டுவதற்கும் கருவிகள் தேவைப் படுகின்றன என்றால்,** தங்கள் உரிமை நலன்களைக் காத்துக் கொள்வதற்காகக் கருவிகளை வைத்துக்கொள்கிறோம் என்று போராளிகள் கேட்பதில் என்ன தவறு? ஏறத்தாழ ஐம்பதாயிரம் பொது மக்களையும் ஆயிரக்கணக்கான போராளிகளையும் காவு கொடுத்த பின்னால், மிகவும் கரவுத் தனமாகத் - தந்திரமாகப், போராளிகளிடம் உள்ள கருவிகள் வாங்கப் பட்டிருக்கின்றன, சில விடங்களில் பறிக்கப் பட்டிருக்கின்றன என்றால், இலங்கைத் தமிழினத்துக்கு இந்தியப் படைகளால் என்ன பாதுகாப்பு ஏற்பட்டு விடும் என்று கருதுகிறார்களோ, தெரியவில்லை.

திலீபனின் பெரும் ஈக மறைவிற்குப் பிறகு, மேலும் விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பதினைந்து பேர், சிங்களப் பீடையினரின் கைகளில் அகப்பட்டு, அவர்களால் மாய்க்கப்படும் முன்னர், தாங்களே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்றால் நிலைமை அங்கு எத்துணை கொடுமையாக உள்ளது என்பதை உய்த்துணர முடிகிறது.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இந்தியாவில் ஒருபுறத்தில் வெள்ளத்திற்கும் மறுபுறத்தில் வறட்சிக்கும் ஆட்சியினரின் தவறான கொள்கைகளும் ஆளுமையுமே காரணம்!

(உலகில் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகளால் உலகில் தாக்கமுறும், பலியாகும் மக்களில் 80 விழுக்காட்டுப் பேர் இந்திய மக்களே!)

இவை ஏதோ வெறுமனே அச்சமூட்டும் புரளிகள் - கற்பனைகள் அல்ல. எச்சரிக்கை தரும் உண்மைகள். அதற்கான அறிகுறிகள்தாம் நாடெங்கும் வறட்சியும் வெள்ளமும்.

• ஆந்திராவிலும் ஒரிசாவிலும் வறட்சி - பஞ்சம் - பட்டினியால் மக்கள் மாண்டு போகின்றனர். பீகாரிலும் மேற்கு வங்கத்திலும் வெள்ளத்தில் மூழ்கி மக்கள் மாண்டு போவதாகச் செய்திகள் வருகின்றன.

இங்கே வறட்சிக் கணிப்புக் குழுக்கள் வந்து போகின்றன; வறட்சி நீக்கக் குரல் மெலிவாகக் கேட்கிறது. அங்கே வெள்ளக் கணிப்புக் குழுக்கள் வந்து போகின்றன; வெள்ள நீக்கக் குரல் அவலமாகக் ஒலிக்கிறது. இரண்டு மூலைகளுக்கும், பார்வையிட, ஆறுதல் சொல்ல, சொல்லுறுதிகளை வீசப் பறக்கிறார் தலைமையமைச்சர் இராசீவ் காந்தி.

வறட்சி - பஞ்சம் - பட்டினிச்சாவுகள் நெறி விலக்குகளாக வந்து போவன அல்ல. இவையே வழக்கமான நெறிகளாக ஆகி விட்டன.

ஆந்திரா, கருநாடகா, மகாராட்டிரா, மத்தியப் பிரதேசம், இராசத்தான் - ஆகிய 5 மாநிலங்களில் மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து வறட்சி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு, குசராத் உட்பட 8 மாநிலங்களில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டும் வறட்சி - பஞ்சம்.

உத்திரப் பிரதேசம் உள்பட மேலும் 8 மாநிலங்கள் புதிதாக வறட்சி தாக்குண்ட பட்டியலில் சேர்ந்துள்ளன.

ஆக 26 மாநிலங்களில் 21, வறட்சி - பஞ்சம் இவற்றால் தாக்கப் பட்டிருக்கின்றன.

எஞ்சிய வற்றுள் 4 மாநிலங்கள் வெள்ளத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

1985-86-ஆம் ஆண்டில் மட்டும் 7437 கோடி உருபா அளவுக்கு வறட்சியாலும் வெள்ளத்தாலும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

1960-இல் 1.85 கோடிப் பேர்கள்தாம் வறட்சியால் தாக்குண்டிருந்தனர். ஆனால் கடந்த ஆண்டு 19.1 கோடிப் பேர், அஃதாவது மக்கள் தொகையில் கால்வாசிப் பேர்களை வறட்சி தாக்கியுள்ளது.

வழமையாக வளம் கொழிக்கும் 60 மாவட்டங்களைக் கடந்த 7 ஆண்டுகளில் வறட்சி தாக்கியுள்ளது.

அதே சமயம் வெள்ளம் வேறொரு பக்கம் தாண்டவமாடுகிறது. 1980-இல் 5.7 கோடி குறுக்கம் (ஏக்கர்) நிலம் நீரில் மூழ்கிப் போனது. ஆனால் 1984-இல் 14.5 கோடி குறுக்கத்தை வெள்ளம் விழுங்கியது. இந்த ஆண்டு இன்னும் அதிக வெள்ளம் வந்து 30 இலக்கம் பேர்களை விரட்டியடித்தது. பல் கோடி குறுக்கம் பயிரை நீரில் மூழ்கடித்தது.

வறட்சி - வெள்ள நீக்கச் செலவுகளோ மலையாக உயர்கின்றன. ஐந்தாவது திட்டத்தில் ஆண்டுக்கு 100 கோடி உருபாயாக இருந்த வறட்சி நீக்கத் தொகை, 1980-85 ஆகிய ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்குச் சமமாகக் கடந்த இரண்டாண்டுகளிலேயே வறட்சி நீக்கச் செலவு ஆகிவிட்டது.

வறட்சி நீக்கச் செலவு, பல மாநிலங்களின் திட்ட முதலீட்டையும் விஞ்சி விடுகிறது.

ஆந்திராவில் திட்ட முதலீடு 1000 கோடி உருபாதான். நீக்கச் செலவோ 1266 கோடி உருபாவாகும். இராசத்தானில் வறட்சி நீக்கத் தொகை 865 கோடி உருபா. திட்ட முதலீடோ 500 கோடி உருபாதான்.

வெள்ளத் தாக்குதலால் உள்ள நிலையும் வேறாக இல்லை. ஆறாவது திட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு ஒதுக்கிய தொகையே 767 கோடிதான், ஆனால் செலவானதோ 1190 கோடி உருபா.

வேறோர் அதிர்ச்சியூட்டும் செய்தி! வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் பேரழிவுகளினால் உலகில் தாக்கமுறும் —பலியாகும் மொத்த மக்கள் தொகையில் 80 விழுக்காட்டுப் பேர் இந்தியாவில் உள்ள மக்களே!

இப்படி நாட்டின் பெரும் பகுதியைப் பாலைநிலமாகவும், எஞ்சிய பகுதியை உவர் நிலமாகவும் பாழடித்த குற்றம், நேரு - இந்திரா - இராசீவ் பரம்பரையையும் அதன் நம்பிக்கையான எடுபிடிகளான காந்திய- பேராயக் கட்சியினரையுமே சாரும்! அவர்களின் போலியான நிகர்மை (சோலிச)க் கொள்கைகளின் நேர் விளைவே இது. இஃது ஏதோ வெறும் பிறால் வீசப் பெறும் அவதூறு அன்று. அடிப்படை முழுமையான குற்றச் சாட்டு ஆகும்.

இவ்வகைக் குற்றச் சாட்டுகளில், வல்லபாய்

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனுர்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்.

துணையாசிரியர்கள்:
தென்மொழி.கல்லே.அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்ஞெளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கெர். செ. சின்னப்பனுர்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து.

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனுர்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	110-00
வாணுள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்; எனவே சலிப்பிலனுய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்
உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு
சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனுர்

தி. பி. 2018 கன்னி (10-10-1987) இதழ் எண்-92

திலீபன்கள் இறக்கக் கூடாது!

விடுதலைப் புலிகளின் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, அவர்களின் முதல் வரிசை வீரர்களில் ஒருவரான **திலிபன்** என்னும் தமிழீழ மறவர் ஒருவர் அண்மையில் பன்னிரண்டு நாள்கள் உண்ணு நோன்பிருந்து (நீரும் அருந்தாமல்) உயிர் விட்டார் என்ற செய்தி, நமக்கு மிகப்பெரும் வருத்தத்தையே கொடுத்தது. அவர் மறைவால் தமிழகத் தலைவர்களில் பலரும் மிகவும் துடிதுடித்துப் போயினர் என்பதை அவர்கள் விட்ட செய்தித்தாள் அறிக்கைகள் தெரிவித்தன.

'உண்ணுநோன்பு' என்பது காந்தியார் கைக்கொண்ட ஒரு வகைப் போராட்ட முயற்சி என்பது சரிதான். ஆனுல், காந்தியார் காலம் வேறு; இராசீவ் *இந்திரா* (காந்தி என்னும் சொல்லை இவர்கள் பெயர்களுடன் சேர்த்து வழங்கவே மனம் கூசுகிறது.) காலம் வேறு. அன்று வெள்ளைக் காரர்கள் இருந்தார்கள். அவர்கள் இரக்கக் குணம் உள்ளவர்கள். இன்று இக் கொள்ளைக் காரர்கள் இருக்கிறுர்கள். இவர்கள் சிறிதும் இரக்கக் குணம் இல்லாதவர்கள். மாந்தப் பண்பு என்பது இவர்களிடம் மருந்துக்கும் இல்லை என்பதற்கு, திலீபனின் இறப்பே சான்ருகும். இப் பார்ப்பனர் கொள்ளையர்களுக்கு இந்திக்காரனின் உயிர் என்பது வேறு; தமிழனின் உயிர் வேறு. அவன் உயிர் இவனுக்கு விலைமதிப் பில்லாதது; தமிழனின் உயிர் சாய்கடைப் புழுவின் உயிர்க்குச் சமமானது. எனவே இவர்களிடம் போய் இரக்கத்தை எதிர்பார்ப்பது. எருமை மாட்டுச் சாணியில் வைரத்தைக் கிளறிப் பார்ப்பதைப் போன்றது. இதற்கு இவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள். எதிர்பார்ப்பவர்களே முழுப் பொறுப்பாளிகள்.

திருக்குறளில் யாரிடம் இரக்கத்தை எதிர்பார்க்க வேண்டும் என்பதற்கு பொய்யாமொழி ஒன்று உண்டு.

> கரப்பில்லா நெஞ்சின் கடனறிவர் முன்நின்
> றிரப்புமோர் ஏஎர் உடைத்து. (1033)

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

நமது முழக்கத்தின்...

..."வகுப்புத் தன்மையற்ற அரசியல் குறித்தும் நிகரமை குறித்தும் பேசுகிறவர் யாராயிருந்தாலும் அவர் கூண்டிலே வைத்து ஆசுதிரேலியக் கங்காரு பக்கத்தில் கண்காட்சியில் காட்டுதற்குரியவரே ஆவார்" —இலெனின்—

பாட்டாளி தாழ்கிறான்!
பணக்காரன் வாழ்கிறான்
படித்தவர் யாருக்கும் வெட்கமில்லை;
ஏட்டிலே எழுதுவோர்
எழுந்து போராடினால்
இருநிலை மாய்ந்திடும் ஐயமில்லை!

என்கிறார் **பெருஞ்சித்திரனார்.**

நாம் தமிழர்; நம் இனம் தமிழினம் என்கிறோம். ஆனால், தொழிலாளர் இயக்க முழக்கம், "போராடும் தொழிலாளிக்குச் சாதியில்லை; மதமில்லை; மொழி இல்லை; இனம் இல்லை; கொள்கையுண்டு; கோரிக்கைகள் பலவுண்டு" என்று தொடர்வதைக் கேட்கிறோம்.

இந்த முழக்கம், இன எழுச்சி விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதுதானா என்று நினைத்துப் பார்ப்போம். மேலோட்டமாக நோக்கினால் 'எதிரானது போல்' தோன்றும். உண்மையில், மாந்தனின் விடுதலைப் பார்வையில் சரியான கருத்தே ஆகும்!

தமிழகத் தொழிலாளர் வகுப்பு, "...மொழி இல்லை; இனமில்லை" என்று முழக்கத்தினை முடித்துக் கொள்கிறது. உலகத் தொழிலாளர் இயக்கமோ, ...'நாடு இல்லை' என்று தன் முழக்கத்தை விரிவாக்கி உயர்ந்து நிற்கிறது. நாம் இந்த முழக்கத்தில் எந்த முடிச்சையும் காணவில்லை!

ஆனால், பாட்டாளி வகுப்பின் போராட்டத் தளம் பல்வேறு மேல்கட்டுகளை அசைத்துத் தகர்த்து வருவதை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

முழக்கங்கள் வரட்டு நூற்பா (சூத்திரம்) ஆகி விடுவதற்குப் பாட்டாளி வகுப்பும் அமைப்பும் இடம் கொடுப்பதில்லை. எனவே, இன்றும், சாதி, மத, மொழி, இன, நாடுகளின் பேரால் ஒடுக்கப்படுவதை எதிர்த்துப் பாட்டாளி வகுப்பு தனது வீரஞ் செறிந்த போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது.

பாட்டாளி வகுப்பு தனக்குரிய அரசையும், ஆட்சியதிகாரத்தையும் அமைத்துக் கொள்ள முயல்கிறது. ஆனால் அதற்குள்ள தடைகளாய் அமைந்துள்ள அனைத்தையும் தகர்த்து வருவதில் தன்னலமற்றுச் செயல்படுகிறது. ஆகவே, அ'து, உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்; நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை; ஒரு பொன்னுலகம் காணப் புறப்படுவோம்" என அறைகூவி அழைத்துக் கொண்டிருக்கிறது. இந்த முழக்கம் இப்போது முடிவுற்றுச் செல்கிறது, ஓர் உறுதியான முடிவை நாடி, என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவேதான், பாட்டாளிகள், தமது வரலாற்றுக் கடமையை ஆற்றுதற்காகத் தங்களைத் தேசிய இனங்களின் விடுதலைப் போரில் அமைப்பாகித் திரண்டு ஈடுபட்டு வருகின்றார்கள்.

கடந்த ஆண்டு பம்பாயில் - இவர்கள் கூட மொழிப்பற்றுக் காரணமாக 'மும்பயி' எனத் தலைநகரின் பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பேராயக்கட்சியின் நூற்றாண்டு விழா நடந்துள்ளது.

அந்த விழாவில் தமிழ் நாட்டுப் பேராயக் கட்சித் தலைவர் காமராசர் பெயரோ, படமோ இடம் பெறவில்லை. ஆனால், பட்டாணியர்க்குத் தனி நாடு கேட்டுத் தமது 96 - ஆம் அகவையிலும் போராடும் கான் அப்துல் கபார்கான் என்ற பழம் பெரும் பேராயத்தலைவர் வந்திருக்கிறார். மற்ற செய்திகளை இங்கே குறிப்பிட்டுப் பேச வேண்டியதில்லை.

இந்த இரண்டு செய்திகளும், நாம் நம் மதிப்பை நிலை நாட்ட, உயர்த்திக் கொள்ளத் தமிழின விடுதலைக்குப் போராட வேண்டும்; அப்படிப் போராடுவது - தனிநாட்டுக் கிளர்ச்சியினை விரும்பும் தலைவர்களுக்கு மதிப்பளிக்கும் பேராயக் கட்சியுணர்வுக்குப் புறம்பானதன்று என்ற உண்மைகளை உணர்த்தி நிற்கின்றன!

இந்தியா என்ற துணைக்கண்டத்தில் தேசிய இனங்கள் விடுதலைக்காகப் போராடும்போது, பாட்டாளிகளின் அடிப்படை இல்லாமல் போகுமா?

எனவே, தன்னலமற்ற தேசிய இன எழுச்சிக்குப் பாட்டாளிகளின் படையமைப்பு உருவாவது தவிர்க்கமுடியாத வரலாற்றுக் கடமையாகும்!

—பழம்பை அறிவன்.

பெரும் பண முதலைகளுக்கு அரசுக் கடன்.

இந்தியாவில் 10 பெரிய வணிக நிறுவனங்களுக்கு மட்டும் நடுவணரசு உருபா 150/- கோடிக்குக் கடன் வழங்கியுள்ளது.

பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் போராட்டங்கள்!

சென்னையில் சனவரி '87 முதல் செப்டம்பர் 20 வரை —நடைபெற்ற கூட்டங்கள் மொத்தம் 1049. அக்கால எல்லையில் நடைபெற்ற மொத்த ஊர்வலங்கள்: 320. அதுவரை நடந்துள்ள போராட்டங்கள் 479. —தினமணி: 20-9-87

தமிழீழ விடுதலைப் போராட்டம், தனி மாநில ஒப்பந்தம் - ஒரு கண்ணோட்டம்.

வியட்நாம் மக்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றை ஒரு முறை கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தி, சிலிர்த்தெழுகின்ற உணர்வுகளுக்கிடையிலும்,

சேக்குவேராவின் கியூபா விடுதலைப் புரட்சியாளர்களின் வீரத் தழும்புகளுக்குச் செம்முத்தமிட்டு வணங்கிவிட்டு,

தமிழீழ மக்களின் புரட்சி வரலாற்றைப் பார்க்கத் திரும்புகையில் ஏற்படுகிற நெஞ்சழுத்தத்தைக் குறைத்துக் கூறிவிட முடியாது.

சரியான கொள்கையும், சரியான நடைமுறையுமே - விடுதலையை வென்றெடுக்க முடியும்.

அந்த வகையில் தமிழீழ மக்கள் விடுதலை என்ற தேவை தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு அழுத்தங்களிலிருந்து முகிழ்த்தெழுந்தது.

அடிமைத்தனத்தில் அமிழ்கின்ற மக்கள் அனைவரும் தீர்மானப் படுத்திக்கொள்கிற விடுதலை உணர்வையே; இந்தத் தமிழீழ மக்களும் தொடக்கத்தில் தீர்மானித்துக் கொண்டதில் எவ்வகை ஐயத்தையும் காண முடியாது.

எந்த ஒரு விடுதலைப் புரட்சியையும் கருவி ஏந்தாமல் செய்து விட முடியாத வகையில், எதிரியின் படைக் கருவிகளையே தாமும் தூக்கிப் போராடப் புறப்பட்ட அந்த ஈழத் தமிழிளைஞர்களை மீண்டும் ஒரு முறை எண்ணிப் பார்த்துப் பெருமை அடைந்து கொள்கிறோம்.

அவ் வகைப் பெருமையுடன் புறப்பட்ட இளைஞர்களின் கொள்கையும், நடைமுறையும் ஒன்றிணைந்தனவா?

சரியான கொள்கையைக் கொண்டிருந்தனரா?

அந்த வகையில் சரியான கொள்கையைக் கொண்டிருப்பின், அக் கொள்கை சரியான நடைமுறையைக் கொண்டிருந்ததா?

இதுவே நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள். இக் கேள்விகளுக்கான முழு விடையையும் நாம் பெறுகிற பொழுது, விடுதலை என்பது தெளிவான, உறுதிப்பாடான எதிர்காலத்தை நோக்கி மலரும் என்பது திண்ணம்.

இந் நிலையில், தமிழீழ மக்கள் விடுதலை பற்றிச் சொல்லப் பெற்றுத் தொடங்கிப் பணி செய்த அனைத்து இயக்கங்களையும் பல நிலைகளில் ஒரே தட்டில் வைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

எந்த ஒரு புரட்சிக்கும், முதலில் புரட்சி செய்யப்புறப்பட்ட இனத்தின் அடிமைத்தனமும், ஆளுமை வெறியர்களும் சரிவரப் பகுக்கப் பெற்று லன்றி அந்த இன மக்களுக்கு விடுதலை இல்லை.

அவ் வகையில், தமிழீழ மக்களின் அடிமைத் தனங்களுக்குக் காரணம்?

ஆளும் சிங்கள இனவெறி அரசும், அமெரிக்க, உருசிய வல்லரசுகளுமாகவே பெரும்பாலான இயக்கங்கள் தொடக்கத்தில் பகுத்துக் கொண்டன.

எந்த ஓர் இயக்கமும், சிங்கள மக்களை எதிரியாகக் கருதியது இல்லை. இவ்வகையில் நாம் ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எந்த ஒரு விடுதலை இயக்கத்திற்கும் நண்பர் யார்? எதிரி யார் என்று வரையறுக்கப் படுதல் வேண்டும். எதிரியையும் நண்பரையும் சரிவர வகுக்காத விடுதலை இயக்கம் முழுமையான நோக்கத்தை அடைய முடியாது.

அவ்வகையில் ஈழத்தமிழ் மக்களின் எதிரியாக நின்றிருக்கிற சிங்கள இனவெறி அரசே முழுமையான தமிழ் மக்களுக்கு எதிரியாக அமைந்திருக்கிறது.

சிங்கள இனவெறி அரசுக்கு முழுபக்க வலிவாக அமெரிக்க வல்லரசு இருப்பது போல அதற்கு முழு நண்பனாக இந்திய அரசு இருந்தது; இருக்கிறது.

இன அளவிலும் சரி, அரசியல் அளவிலும் சரி, இன்றைக்குப் பொருளியல் அளவிலும் சரி இன்றைக்கு இந்தியா ஆளும் அரசு முழுமையான நண்பனாகச் சிங்கள அரசுக்கு எவ்வாறு உள்ளதோ, அதே அளவு இன்னும் சொன்னால் அதைவிட அதிகமான அளவு சிங்கள அரசும் இந்திய அரசை நண்பனாக ஆக்கிக் கொண்டுள்ளது.

இவ்வகையில் எதிரிக்கு நண்பன் உறுதியாக நமக்கும் நண்பனாக இருக்கவே முடியாது. அந்த வகையில்,

இந்திய அரசை முழுமையாக எதிரியாகக் கொள்ளாமல் இந்திய அரசை முழு உதவியாளர்களாக, நண்பனாகக் கொள்ள நினைத்து உறவு கொண்ட ஈழப்போராளிகளை எண்ணியே நாம் கவலை கொள்கிறோம்.

தொடக்கத்தில் பாண்டி பசாரில் நடந்த சண்டையின் பொழுது வெளிப்படத் தொடங்கிய இந்த இயக்கங்கள் அன்றைக்கு முழுமையாக இந்த இந்திய அரசால் தேடப்பெற்று, சிறையில் வைக்கப்படுகிற அளவில் எதிரிகளாகவே கொள்ளப்பட்டன.

எனவே ஈழப்போராளிகளும் இந்த இந்திய அரசை எதிரியாகவே எண்ணின. ஆனால் காலப் போக்-

Scanned with CamScanner

கில் ஈழப் போராட்டத்தின் தேவையும் அதன் தன்மையையும் அதை ஒடுக்குகிற வழிமுறையையும் நன்கு கண்டு தெளிந்திருந்த இந்திய அரசோ,

ஈழப்போராளிகளைத் தமக்கு நண்பர்களாக்குவது போல் நண்பிர்களாக்கி அவர்களின் கழுத்தை அறுக்கத் துணிந்தது.

அது வீசிய வலையில் ஈழப்போராளிகளின் அணிகள் அமிர்தலிங்கத்திற்குப் பின்னால் கைகட்டிக் கொண்டு சென்றன.

திம்புப்பேச்சு உரைக்கு,

மிகவும் எழுச்சியோடு கலந்து கொண்டன அவை.

இந்திய அரசின் சூழ்ச்சி வலையில் விழுந்துவிட்ட அவ் வியக்கங்களைப் பிரித்தாண்டு அவற்றை ஒடுக்கத் தெளிவாகத் திட்டமிட்டது இந்திய அரசின் உளவுத்துறை.

''ஒரு கையில் 'துப்பாக்கி'யையும், மறு கையில் வெற்றி வாகை மலரையும் எடுத்துக் கொண்டு திம்புப் பேச்சுரைக்குப் போகிறோம், எது பயன் படுகிறதோ அதைப் பயன்படுத்துவோம்'' என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) தமது (Spark) ஆங்கில வெளியீட்டில் வெளியிட்டது. அந்த அளவில், தாம் திம்புப் பேச்சுரைக்கு மதிப்பளித்தது என்பதை உள்ளடக்கிக் காட்டியது.

தமது இதழ்களில் இந்திரா காந்தியின் படத்தையும் போட்டு இந்திய அரசைப் பாராட்டியும் எழுதுகிற வரிகளையும் பார்த்தபோது இவ்வியக்கங்களின் ஏமாளித்தனங்கள் தொடக்கத்திலேயே தெரிந்தன.

ஆனால் அவை இ'தை ஒரு 'தந்திரமாக'த் தாங்கள் பயன்படுத்துவதாக அறிவித்து இறுதியில் தங்களையே இழந்து விட்டன.

இப்போராளிகள் இந்திய அரசு கொடுக்கும் கருவிகளை ஏற்பதும், இந்திய அரசு கொடுக்கும் பண உதவிகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளுவதும், இந்திய அரசுக்குத் தம் நோக்கில் விடிவெள்ளியாகத் தெரிந்தன.

தமிழீழ விடுதலை அமைப்பு (TELO) தலைவர் சிறி சபாரத்தினத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஈழத்தில் படைத் தளங்களின் இடங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ளத் திட்டமிட்ட இந்திய அரசுக்குப் பாதி அளவு வெற்றியைத் தேடித் தந்தார். சிறி சபாரத்தினம்.

அந்த நேரத்தில் விழிப்புற்றுக் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சிறி சபாரத்தினத்தைச் சுட்டு விழ்ந்தவே, தங்கள் திட்டத்தில் பெருமளவு பின்னடைவோடு அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டது - இந்திய அரசு.

ஆனால் புலிகளின் இந்த நடவடிக்கையினைக் கருத்தளவில் சரியெனப் பேசிக் கொண்டிருந்த பிற இயக்கங்கள், இதழ்களில் வெகுவாகக் கண்டித்து எழுத்தளவில் அறிக்கை விட்டன.

இதன் வழி புலிகள் இயக்கத்தைக் காட்டிலும் பிற இயக்கங்கள் இந்திய அரசின் கூலியால் மடி நிறைக்க வாய்ப்பு அதிகமாக இருந்தது.

இதை விரும்பாத புலிகள் இயக்கம் இந்திய அரசுக்குத் தம்மை முழு நண்பராக மாற்றிக் கொள்ள எண்ணியே, இதுவரை சிங்கள மக்களின் மீது எவ்வகைத் தாக்குதலும் செய்யாமல் இருந்ததைக் கைவிட்டு, இந்திய அரசின் ஆணையை முழுமையாக ஏற்றுக் "கிளி நொச்சி" அம்பாறையிலும் ஒன்றுமறியாச் சிங்கள மக்களைக் கொல்லத் தொடங்கி, சிங்கள மக்களிடமிருந்தும் பெருமளவிற்கு எதிர்ப்பினைப் பெற்றது.

இச்செயல் பாடுகளின் தொடர்ச்சியாகத் தமது திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிக் கொண்டிருந்த இந்திய அரசு, மோகன்தாசு, தேவாரம் வழியாக எப்படியாவது ஈழப்போராளிகளைத் தமிழக மக்களிடமிருந்தும் அயன்மைப்படுத்த வேண்டும் எனும் சூழ்ச்சியில், சூளைமேடு கலவரம், வேதாரண்யக் கலவரம், தஞ்சை உரத்த நாடு கலவரங்களைத் தாங்களே பின்நின்று முடித்து விட்டுக் கருவிப் பறிப்புப் பணிகளில் ஈடுபட்டதுடன், ஏராளமான போராளிகளையும் தமிழகச் சிறைகளில் அடைத்துத் துன்புறுத்தத் தொடங்கிவிட்டது.

இந்தக் காவல்துறை செய்வது சரி என்றே தமிழக மக்கள் சிந்திக்கும் படியாகச் செய்து விட்டன இந்த ஆளும் அரசுகள்.

இந்தப்போக்கு நிலையில் போஃபர்சு ஊழலை மறைப்பதற்காகவும், சோவியத்தின் பின்னணியில் எப்படியாவது இந்தியப் பெருங்கடல் பகுதியில் தமது படை வலிவைச் சோவியத்துக் கூட்டோடு பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றும் திட்டமிட்டிருந்த இராசீவ் காந்தி, இந்திய சோவியத்துக் கலைவிழாவாகச் சோவியத்து ஒன்றியத்தில் இந்தியக் குழுக்களை நாடகமாடவிட்டு விட்டுச் சோவியத்து அதிபர் கோர்பச்சேவோடு கூடிக் குலாவித் திட்டமிட்டார்.

தங்கள் பிரித்தாளுகிற சூழ்ச்சியில் ஒடுக்கப்பட்டிருந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) தமிழீழ விடுதலை அமைப்பு (TELO) ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) இயக்கங்களின் வலிவைக் காட்டிலும் முழுவலிவோடு விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கத்தை உருவாக்கி, அதன் தலைவர் பிரபாகரனை முழு அடிமையாக மாற்றியது இந்திய அரசு.

ஒப்பந்தத்திற்கு முன்பாக, போராளிகள் பிறருக்கோ தமிழக அரசுக்கோ தெரியாதபடி இருந்த பிரபாகரனின் இடத்தை இந்திய உளவு நிறுவனம் 'ரா' முழுமையாகத் தொடர்பு கொண்டிருந்த படி

யால் தெரிந்து கொண்டு திரு. பிரபாகரனைச் சிறப்பொடு அழைத்து வந்து, முன்பு திரு. அமிர்தலிங்கம் வகையினருக்குப் படைக்கப் பெற்று அடிமைப் படுத்திய உணவு வகையினைப் பரிமாறி பிரபாகரனைக் கட்டுப் படுத்தி ஒப்பந்தத்தை ஏற்கும்படி கூறவே, அவர் ஏற்று ஈழத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று.

இந்த நிலையில் புலிகள் இயக்கம் சரியானபடி ஒத்துழைக்காமல் போகுமானால் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தைப் பயன்படுத்தலாம் எனத் திட்டமிட்டப்படி இந்திய உளவு நிறுவனம் ஏராளமான கருவிகளைத் த.ம.வி.க (PLOT) விற்குக் கொடுக்கவே அதைப் பெற்றுக் கொண்டு ஒப்பந்தத்திற்குப் பின்னர் அண்மைக் காலமாக இந்திய அரசுக்கு முழு அடிமைப்பட்டுப் புலிகள் இயக்கப் போராளிகளைக் கொல்லுகிற பணியைத் தொடங்கியது முகுந்தன் இயக்கம்.

இந் நிலையில் தன்னலச் சூழலுக்காக இந்திய அரசால் தனித்து விடப்பட்ட பிரபாகரன் இயக்கம் உள்பட ஒட்டுமொத்தமாக எல்லா இயக்கங்களையும் இந்திய அரசு திட்டமிட்டபடி அழித்துக் கொண்டுள்ளது.

ஆக, எதிரியோடு நட்பு வைப்பதில் போட்டி போட்டுக் கொண்டு தம்மை அழித்துக் கொள்கிற இயக்கத் தலைமைகளின் சீர்கேட்டின் தொடர்ச்சியே இன்றைக்கு ஒப்பந்தம் என்கிற பின்னடைவு என்பதை நாம் முழுமையாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இவர்களின் இந்த அடிமைத்தனம், ஆப்கானிசுத்தானில் சோவியத்துப் படை புகுந்து கொண்டுள்ளதைப் போன்று, இன்று சோவியத்துப் பின்னணியில் இந்தியக் கூலிப்படையைத் தங்கள் நாட்டிற்குள் புகுத்திக் கொண்டது.

நேற்று வரை தங்கள் நாட்டின் சிங்கள இனவெறி அரசின் கூலிப்படையை மட்டும் எதிர் கொள்ள வேண்டியிருந்த இந்தப் போராளிகள், இன்றைக்குச் சோவியத்துப் பின்னணியில் இயங்குகிற இந்திய இன வெறி அரசின் கூலிப் படையையும் தம் நாட்டில் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

ஆக, எதிரிகளை அதிகமாக்கிக் கொண்ட இந்த ஏமாளித்தனத்தை, இந்த இயக்கத் தலைமைகளின் பிழைப்பு (வாத)நிலையினை என்ன வென்று சொல்வது?

இவற்றிலிருந்து உண்மை விடுதலை காணத் துடிக்கும் இளைஞர்கள் கருத்தில் கொள்ள வேண்டுவன:

இன்றைய ஈழத் தமிழ் மக்களின் விடுதலை என்பது, **முழுமையாக சிங்கள இன வெறி அரசையும், இந்திய இன வெறி வல்லாளுமையையும், அமெரிக்கா, சோவியத்து போன்ற வல்லாளுமை, குமுக வல்லாளுமைகளையும் எதிர்ப்பது என்பதே.**

பாடுக தமிழனே, பாடுக!

- பாவலர் இளஞ்சித்திரன் -

பாடுக தமிழனே, பாடுக! -போர்ப்
பாசறை உணர்வு நீபெற வேண்டும்!
(பாடுக)

பீடுகொள்பா வேந்தன் பாரதி தாசன்,
பெருஞ்சித்திரப் பாவல ரேறுநம் நேசன்
நாடு கைக் கொள்ள உனக்கே பாடிய
[பாடல்கள்! (பாடுக)

நீடுதுயில் கொண்டனை; நின் மறத்தனமும்
[எங்கே?
நின்பழமைப் புகழெல்லாம் வெற்றி
[யெல்லாம்'எங்கே?
கேடுபல கண்டனையே! கிளர்ச்சிமுகம் எங்கே?
கீழ்மகனாய் ஆயினையா? உணர்ச்சியெல்லாம்
— [எங்கே? எங்கே? (பாடுக)

முடமாகப் போயினையா? மொய்ம்பெல்லாம்
[எங்கே?
மூத்ததமிழ் அன்னையவள் உரிமையெல்லாம்
[எங்கே?
இடமாகப் போயினையே பிறர்பழிக்க இங்கே?
இனமானம் தன்மானம் போனதெல்லாம்
—[எங்கே? எங்கே? (பாடுக)

கண்ணவிந்து போனதுவோ? கருத்தெல்லாம்
[எங்கே?
கைமாறி வாழ்கின்ற மகளாநீ இங்கே?
மண்ணிழந்த மரமாக வீழ்ந்தாயே! எங்கே
வளர்ந்திடுவாய்? வையத்தில் நீநிலைத்தல்
—எங்கே? எங்கே? (பாடுக)

வாயடைத்துப் போனாயா? வண்டமிழ்ப்பற்
[றெங்கே?
மாற்றார்க்கே அஞ்சாத மணிமார்பும் எங்கே?
காயடித்த அடிமாடாய் இருப்பதுவோ இங்கே?
கனல்பறக்கக் கொதித்தெழுவாய்
—[விடுதலைக்கே இங்கே! இங்கே! (பாடுக)

அதற்கு அவை, நட்பாகக்கொள்ள வேண்டிய ஆற்றல்கள்:

உண்மையில் சிங்கள இனவெறி அரசையும், இந்திய இனவெறி வல்லாளுமையையும் எதிர்க்கக் கூடிய ஆற்றல்களான சிங்கள உழைக்கும் மக்களின் ஆற்றலும், இந்தி இனவெறி அரசிலிருந்து விடுதலை பெறப் போராடிக் கொண்டிருக்கும் இந்தியாவில் உள்ள தேசிய இனங்களையுமே ஆகும். அவற்றுள் தங்கள் விடுதலைக்கு முழுப் பாதுகாப்பும், துணையுமாக, நிற்கிற, தமிழக மக்களின் விடுதலைக்குப் போராடும் தமிழ் நாட்டு விடுதலை இயக்கங்களையுமே ஆகும் - என்பதில் தெளிவடைய வேண்டும். **—விடுதலை வேட்பன்.**

பிரிவினை இல்லை, விடுதலை!

தமிழ்நாடு தமிழ்த்தேசிய இனத்தின் கையில் இல்லை. இ'து, இந்திய வல்லரசின் பிடியில் உள்ளது. இந்திய வல்லரசு, உலக வல்லரசியங்களின் 'ஏவல்காரனு'க் செயல்படுகிறது, என்றாலும் இது பண்பளவில் தரகுத்தன்மை உடையது. 'தரகு'க்காக எந்த வல்லரசிற்கும் ஊழியஞ் செய்வதில் இந்த அரசு வெட்கப்படுவதில்லை.

எனவே, தமிழ்நாடு 'அடிமை' யிலும் இழிந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளது. உலகில் நீண்ட வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட தமிழ்நாடு, 'அவல அடிமை'யாக இருப்பது பொறுத்துக் கொள்ளக் கூடியதன்று.

நாம் உலகில் உள்ள எந்தத் தேசிய இனத்திற்கும் சமநிலை தந்து போற்றுவோம். ஆனால்' அடிமைபடுத்தும் 'இனவெறியை நாம் அடித்து நொறுக்கித் தகர்த்திட அஞ்சிடோம். தேசிய இனங்களின் விடுதலையை வரவேற்கும் நாம், நம் தமிழ்த் தேசிய அடிமைத் தனத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது எங்ஙனம் ஏற்புடையதாகும்?

உருசிய, சீன, வியத்நாம், கம்பூச்சியா போன்ற தேசியங்களை ஏற்பவர், மும்பயி, தெலுங்கு தேசம் போன்ற உணர்ச்சிகளை மதிப்பவர்கள் தமிழ்த் தேசியத்தை மறுப்பார்களாயின் என்னென்போம்! போராட்ட வெடிப்புகளால் 'இந்திய உருவம்' சிதைந்து கொண்டிருப்பதை 'அவர்கள்' உணர்ந்திருப்பதாலேயே 'ஒருமைப்பாடு' என்ற பெயரில் ஒடுக்குமுறைகளையும் அடக்கும் வழிகளையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்குகளில் ஒரு முறைதான், கல்வியை இந்திய மயமாக்குவது! ஒன்றிரண்டு வழங்கப்பட்ட 'உரிமை'களும் திரும்பப் பெறப் படுகின்றன. ஏனெனில் நாம் 'வாங்கிய' விடுதலை, 'இரவல் சோற்றில், இரந்து - பெற்ற - சோறுகவே' உள்ளது!

எனவே, நாம் 'உரிமை'யின் மெய்ப்பொருள் பயனை - விளைவினை - அறிய முடியாதவர்கள் ஆக்கப் பட்டுள்ளோம்!

விடுதலையுணர்ச்சி, பொருளியல், குமுகவியல், அரசியல் காரணங்களால் தீவிரம் பெறுவதை அறிவோம். ஆயினும், பண்பாட்டுத் தளத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம், விடுதலை யுணர்ச்சியை விரைவு படுத்தும் என்பதை நாமும் புரிந்து கொண்டிருக்கிறோம்!

'இந்திய அரசு' பிரிட்டன், சோவியத்து அமெரிக்கா முதலிய வல்லரசியங்களாலும், பன்னாட்டுப் பொருளியல் உறவினாலும் காக்கப்பட்டு வருகின்றது. இதனை மக்கள் போராட்டம் எதிர்க்கின்ற போதெல்லாம், 'தன்விரலைக் கொண்டு தன் கண்ணைக் குத்திக் கொள்வது போல'த் தேசிய இனங்களின் எழுச்சியினை முறியடிக்கும் 'தந்திரத்தில்' தரகனின் குணம் வெளிப்படுவது கண்டு வியக்காமலிருத்தல் இயலாது.

பஞ்சாபிற்குத் தமிழ்நாட்டுக் காவல்படை, தமிழ்நாட்டுக்கு மலபார் காவல்படை - - - என்று, மாற்றி (ஏ) மாற்றிச் செயல்படுகின்ற 'இந்திய அரசின்' நுண்மையை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்!

தெற்கு, வடக்கு என்ற கண்ணோட்டம், 'இந்திய அரசினை' ஒரு வகையில் அசைத்து நிலை நிறுத்தி விட்டது என்றே சொல்லுதல் வேண்டும். அதற்கு, வடக்கில் உள்ள தன் எதிர்ப்பாளர்களைச் சரிகட்டவே அந்தக் கண்ணோட்டம் உதவியது எனலாம்!

'விடுதலை'க்கான போராட்டம் நடத்தும் போது அதற்கான காரணங்கள் சர சர வென்று வெளிப்படும். பல்வேறு தடைகளும், கட்டாயங்களும் காரணங்களை வெளிப்படுத்த விடாமல் செய்துள்ளன. அரசின் தடைகளை எதிர்க்கின்ற போராட்டத்தில் வரலாறும், பொருளியல், அரசியல் காரணங்களும் வடிவம் பெறுவது திண்ணம்!

தமிழக மக்களின் உழைப்பையும், விளைவினையும் உறிஞ்சிக் கொழுத்துக் கொண்டிருக்கிற 'இந்திய அரசின்' ஆளும் கும்பல், 'தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களைப் 'பிரிவினை' எனப் பேசி ஒடுக்க முயல்வது இயல்பே ஆகும்! இதற்குத் தாளம் போடும், ஒத்து ஊதும் புரட்சி அரசியல் காரர்கள் தேசிய இனங்களின் எழுச்சியினை 'முகவர் முத்திரை' குத்தப் புறந்தள்ளப் பார்க்கின்றார்கள்! அவர்கள் மீதும் மாறி மாறி 'முத்திரை' குத்தப்பட்டு 'ஒதுக்கப்பட்டதை' அவர்கள் மறந்திருத்தல் இயலாது! —பறம்பை அறிவன்.

தமிழ் நாட்டில் இந்தி படிப்போர் தொகை கூடுகின்றது!

தமிழ் நாட்டில் இந்தி படிப்போர் தொகை கூடுகிறது.

திருச்சி, 'தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா' தரும் புள்ளி விளக்கம்.

	இந்தி படித்தோர் தொகை.,
1) 1936 முதல் 1946 வரை [உள்ள 10 ஆண்டுகளில்	96,896.
2) 1946 - 1956 ,,	99,723.
3) 1956 - 1966 ,,	2,13,647.
4) 1966 - 1976 (தி. மு. க. ஆட்சி)	1,59,476.
5) 1976 - 1986 (அ. தி. மு க. ஆட்சி)	2,60,635.

தி.மு. க. ஆட்சிக் காலத்தில் குறைந்த தொகை அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் கூடியதென்ன?

Scanned with CamScanner

இலங்கையில் கூட ஈழப் போராளிகள் விடுவிக்கப் பெறுகின்றனர்? ஆனால் இங்கே-?

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் இருநூறுக்கும் அதிகமாக இலங்கைத் தமிழ்ப் போராளிகளைச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றது, தமிழ் நாடு அரசு. பொய் வழக்குகளைப் போட்டு அப் போராளிகளைத் துன்புறுத்துகின்றது தமிழகக் காவல் துறை!

மாதக்கடைசியானால் வீதிகளில் இலங்கை தமிழ் இளைஞர்கள் நடமாட முடியவில்லை. வழக்குகள் கணக்குக் காட்டுவதற்காகவும், கையூட்டுப் பெறுவதற்காகவும் வீதிகளில் காணும் இலங்கைத் தமிழ் இளைஞர்களைத் தளை செய்து பொய்வழக்குப் போடுகின்றனர்.

கையூட்டுக் கொடுக்க வசதியுள்ளவர்கள், சாய்கால் உள்ளவர்கள் இதனைப் பயன்படுத்திச் சிறையில் இருந்து வெளிவருகின்றனர். அதற்கு வசதியற்றவர்கள் தொடர்ந்து சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கொழும்பு மூலம் வெளிநாடு செல்லத் தடை ஏற்பட்டபோது, இளைஞர்கள் பலர் தோணிகள் மூலம் இந்தியா வந்து இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்றனர். இதற்குத் தேவையான பணத்தை இங்கு விற்கக்கூடிய பொருட்களாக, அல்லது தங்கமாகக் கொண்டுவந்தனர். இவவாறு தங்கள் சொந்தப் பணத்தைப் பொருள்களாக மாற்றிக் கொண்டு வந்தவர்களைக் கடத்தல்காரர்கள் என்றும் கொள்ளைக்காரர்கள் என்றும் தளைப்படுத்திச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றார்கள்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டு அதன்படி செயவர்த்தன கூட சிறையில் அடைத்து வைத்திருந்த தமிழ் இளைஞர்களை விடுதலை செய்கின்றபோது, இந்தியாவில் தொடர்ந்தும் தமிழ்ப் போராளிகளை அடைத்து வைத்திருப்பதும் ஏன்?

ஒப்பந்தத்தையொட்டி மாபெரும் விழாக்கள் நடத்தும் நடுவண், மாநில அரசுகள் ஒப்பந்தத்தின் நிமித்தம் அனைவர்க்கும் பொது மன்னிப்பு வழங்குவதாகக் கூறிவிட்டு அதை இன்னும் நடைமுறைப் படுத்தாது ஏன்?

சிறையில் வாடும் இணைப் போராளிகளை விடுதலை செய்யக்கோரிக் கேட்பதற்குத் துணிவற்று இருக்கும் விடுதலை இயக்கங்களின் தலைமைகள் நடுவண், மாநில அரசுகளைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதனைப் பயன்படுத்தித் தனிப்பட்ட போராளிகள் மீது பொய் வழக்குகள் சூட்டிச் சிறையில் தள்ளுகிறது மாநில அரசு, தமது அரசியல் தந்நலன்களுக்காக ஈழப் போராளிகளைப் பகடைக் காய்களாகவே பயன்படுத்தி வந்துள்ள நடுவண், மாநில அரசுகள் இன்றும் அரசியல் உள்நோக்கத்துடனேயே இவ்வாறு நடந்து கொள்கின்றன. இதனை அம்பலப்படுத்தி இலங்கைப் போராளிகளையும் ஏதிலிகளையும் விடுக்குமாறு இந்திய அரசை வலியுறுத்துவது குடியரசு உணர்வுள்ள அனைவரதும் கடமையாகும்.

எவ்வகைக் கட்டுப்பாடும் இன்றி இலங்கைத் தமிழ்ப் போராளிகளும், அகதிகளும் விடுதலை செய்யப்பட - போடப்பட்ட பொய் வழக்குகள் திரும்பப் பெறப்படல் வேண்டும். அனைவரும் பாதுகாப்பாக இலங்கைக்குத் திரும்ப அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று '**இலங்கை -இந்திய மக்கள் நட்புறவுக் கழகம்**' கோரிக்கை விடுத்துள்ளது.

ஊரைக் கூட்டி!

'மக்களின் திருவிழா புரட்சி' என்பர்; அப்படி ஒரு விழாவிற்காக நாமெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறோம். விழாவில் ஈடுபடும் மக்கள் விழாவினை நடத்தும் முறையையோ, திட்டத்தையோ அந்த மக்கள் அறிந்திருப்பதில்லை. ஆனால், அதன் நெறிகளுக்கு உட்பட்டுச் செயல்படுவதில் மக்கள் பிசகுவதில்லை. ஏனெனில் 'அது' அவர்களுக்காகவே பெறுவதாகும்!

நாம் உழைக்கும் மக்களை அழைப்போம். அவர்கள் அதில் ஈடுபடுவார்கள். அந்த 'நாம்' யார்? 'நாம்' முன்னணியில் இருப்பவர் ஆவோம். ஊரைக் கூட்டித் தேரை இழுப்பதன்று புரட்சி. தேரை இழுக்கச் சிலரும், அதன் அசைவை வரவேற்க மக்களும் வேண்டும். 'நாம்' மக்கள் தங்களின் வாழ்க்கைச் சிக்கலைத் தீர்ப்பதில் உழைப்பு, மேலும் உழைத்தல் என்றே இருப்பார்கள்! 'நாம் தாம்' அவர்களின் 'விடுதலைக்காக' நம்மை நாம் ஈகப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்!

முன்னுணர்தல் என்பது முன்னேறிய எண்ண வளர்ச்சி முதிர்ச்சி உடையவர்க்கே இயலும் - இதனை உழைப்பியக்கத்திலிருந்தே பெறுதல் முடியும். அவ்வியக்க உறுப்பினர்களே, போராளிகளே 'மாற்றத்தை' - 'வாழ்வியல் ஏற்றத்தைக் கொண்டு வர வல்லவர்கள்!

நின்று, கனன்று, கனலியென இயங்குவோம். அதற்காக நம்மை நாம் இணைத்துக் கொள்வோம்!

—பறம்பை அறிவன்

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

—அஃதாவது ஒளிவு மறைவில்லாமல் உண்மையே நிரம்பியுள்ள நெஞ்சையுடைவராய், தமக் குற்ற உயிர்க் கடமையையும் அறிகின்றவர்கள் முன்னம் நின்று இரக்கின்ற நிலையும் கூட ஒரு வகைப் பெருமை உடையது — என்பது அதன் பொருள்.

கேட்கப் படுபவன் கவடில்லாத நெஞ்சத்தைக் கொண்டவனாகவும், உயிர்க்கடமையை உணர்ந்தவனாகவும் இருத்தல் வேண்டும். இரக்கமற்ற அரக்கர்களுக்கு முன் போய் 'என் உயிரைப் பணயம் வைத்துச் சாகும் வரை ஒரு கொள்கைக்காக உண்ணா நோன்பு இருக்கப் போகிறேன்' என்று எத்தனைத் திலீபன்கள் கூறி நோன்பு மேற்கொண்டாலும் அந்தத் திலீபன்களும் சாவைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்பது திலீபன்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்; ஏனெனில் அவர் இளைஞர்; இறவாக் கொள்கையர்; மறம் விளைத்த வடிவம்! மானம் கொப்பளிக்கும் உணர்வு! ஆனால் அவர் வீரத்தை அடையாளம் கண்டு கொண்ட பிரபாகரன்களுக்குத் தெரியாதோ, திலீபன் இறந்துதான் போக வேண்டி இருக்கும் என்று. அவ்வாறு தெரிந்திருந்தால் இந்த அரக்கர்களிடம் எதற்குப் போய் இரக்கத்தை எதிர் பார்த்துக் கிடக்க வேண்டும்.

ஒரு முறை கோவை அறிவியல் அறிஞர் கோ. துரைசாமி அவர்களிடம், அவர்களுடைய வீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அக்கால் முரசொலி — செய்தித்தாள் வந்தது. இந்தி யெதிர்ப்பு முழங்கிய 1965 -இன் கால கட்டம் அது. அத்தாளில் கலைஞரின் சூளுரைப்பேச்சு ஒன்று அச்சாகி இருந்தது. 'இந்தி வந்தால் என் உயிரை விட்டாகிலும் நான் தடுப்பேன்' என்று கலைஞர் பேசியிருந்தார். இதை வாய்விட்டுப் படித்தகோவை கோ. து. அவர்கள், 'என்ன மயிருக்காக'டா (அவர் கூறிய சொல்லை அப்படியே எழுதுவதற்கு அறிஞர்கள் பொறுத்துக் கொள்க.) உன் உயிரை விட வேண்டும்; அவன் உயிரை எடுப்பேன் என்றன்றோ கூறியிருக்க வேண்டும்' என்று உணர்வு மிகச் சொன்னார்.

அந்த உணர்வுதான் தமிழர்க்கு இக்கால் வேண்டும். அதைத் தவிர்த்து விட்டு, உண்ணா நோன்பிருப்பதும் உயிரை விடுவதும் திலீபன்களுக்கும் அவரைப் போன்ற கொள்கை வீரர்களுக்கும் அழகுடையதும் அன்று; அறிவுடையதும் அன்று!

திலீபன் இறப்பு - ஈகம் மிகப் பெரியது; பெருமை யுடையது! இந்த மண்ணுள்ளளவும் விண்ணுள்ளளவும் தமிழர்களால் மதிக்கத்தக்கது. ஆனால் அவற்றை விடவும் அவர் உயிர் பெருமையுடையது; விலை மதிப்பற்றது! அந்த வீரம் இனி யாருக்கு வரும்? அப்படி வருவதானால் தமிழர்கள் இக்கால் மேலும் மேலும் அடிமைப் பட்டுக் கொண்டிருப்பார்களா? வேறுபாடு கொண்டு விளங்குவார்களா?

திலீபன்கள் வேண்டும்! இன்னும் நூறு : ஆயிரம் - பதினாயிரம் திலீபன்கள் வேண்டும்! ஆனால் உண்ணாநோன்பிருந்து உயிரை விட அன்று; உண்டு முறுக்கேறி எதிரிகளின் உயிர்களை வாங்க! ஏ! எதிர்காலத் தமிழகமே! எங்கே உன் வீரத் தாய்மார்கள்? விளைவித்துத் தரச்சொல் அவர்களிடம் ஆயிரக் கணக்கான திலீபன்களை! அப்பொழுது தான் உன் அடிமைத் தனத்திற்கு ஒரு விடிவு தோன்றும்! செய்வாயா? உய்வாயா?

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டேலும் மொரார்சி தேசாயும் அப்பட்டமான, அறிவு முழுமையான ஆளும் இனப் படிநிகராளியர்கள். எனவே அவர்கள் செய்யும் குற்றங்களையும் மக்கள் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால் நேருவைப் போலும், இந்திராவைப் போலும் நிகரமை (சோசலிச)க் கொள்கையின் பெயரால் இயங்கும் வஞ்சகப் பொய்ப் புனைவாளர்களையும் அவர்கள் செய்யும் போலிச் செயல்களையும் அடையாளம் கண்டு கொள்வது பெரிது மக்களுக்குக் கடினமானதாகும்.

இவர்கள் தமது அடிமுட்டாள் தனமான, கோமாளித் தனமான கொள்கைகளையே சமநிலை அல்லது நிகரமைக் கொள்கை மூலாம் பூசி மக்களிடம் அரசியல் வாணிகம் நடத்தினார்கள். இதனால் நாட்டுக்கு எவ்வளவோ கேடுகளைச் செய்துள்ளனர்.

தொழில் துறையில் உருசியாவையும், மேலை நாடுகளையும் நாம் பார்த்துப் பின் பற்றியதைப் போலவே, வேளாண்மைத் துறையிலும் அவ்வாறு செய்ததால் வந்த கேடுகள்தாம் இவை.

நேருவின் நீர்ப்பாசனக் கொள்கைகளும், இந்திராவின் பசுமைப் புரட்சியுமே, வளங் கொழித்த நிலங்களைப் பாலைநிலங்களாகவும் உவர் நிலங்களாகவும் பாழடித்ததற்கான காரணங்களாகும். இராசீவ் கும்பல் தொடர்ந்து தம்முடைய முதாதையர் பாதையிலே போய் நாட்டை வெறும் பஞ்ச நிலம் ஆக்கிவிடத் தீர்மானித்து விட்டது.

ஒரு பெரும் பகுதி நிலம் பாலைநிலமாகவும் எஞ்சிய பகுதி நீரில் மூழ்கியும் உவர் நிலமாகியும் பாழாவது ஏதோ இயற்கையின் தண்டனை; அதை ஒன்றும் செய்ய முடியாது; துயர்துடைப்பு உதவி மட்டுமே தரமுடியும் என்று பொய்யான கருத்துப் பரப்புதல் செய்யப் பெறுகிறது. கூடவே பண்டாரங்கள் முதல் காவலர்கள் வரை தொழுகை நடத்தவும் செய்கிறார்கள். ஆளுவோரின் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கான குறுக்கு வழி, இது! மற்றபடி இயற்கையின் தண்டனையோ, தெய்வத் தேர்ச்சியோ, சீற்றமோ எதுவுமில்லை.

ஒரே சமயத்தில் வறட்சியும் வெள்ளமும் நிலவு

Scanned with CamScanner

கிறது என்றால் தண்ணீரின் பற்றுக் குறைக்கும் பயன் படுத்தத்திற்கும் ஆளுவோரின் தவறான கொள்கைகளும் ஆளுமையுந்தாம் காரணமாகும். இதை துயர்துடைப்பு உதவிகளால் மட்டுமே தீர்த்துவிட முடியாது

ஒவ்வோராண்டும், இன்னும் பெய்து கொண்டிருக்கும் மழையளவைப் பார்த்தாலே இது புரியும்.

நாடெங்கும் பெய்யும் மொத்த மழையளவு 40 கோடி எக்டேர் மீட்டர். இதில் பெய்தவுடன் 17.5 விழுக்காடு அளவிற்கு ஆவியாகி விடுகின்றது. 37.5 விழுக்காடு அளவுக்கு நிலத்திற்குள் சுவரிப் போய் விடுகிறது. எஞ்சிய 45 விழுக்காடே வெள்ளமாகப் பாய்கிறது. பெய்த மழையில் 4.25 விழுக்காடே பெரிய மற்றும் நடுத்தர அணைகளில் தேக்கி வைக்கப் படுகிறது. 1. அல்லது 1.25 விழுக்காடு அளவு குளம் குட்டைகளில் தேங்குகிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? பெய்யும் மழையில் ஏறக்குறைய 40 விழுக்காடு விணைகப் போய்க் கடலில் கலக்கிறது. 4.25 விழுக்காட்டைத் தேக்கிவைத்துப் பயன்படுத்துவதற்காக இதுவரை 27000 கோடி உருபா கொட்டப்பட்டுள்ளது.

இவையெல்லாவற்றையும் விட மேலாக, நிலத்திற்குள் போகும் நீரில் 7.4 விழுக்காடு அளவுக்கு மண்ணை ஈரமாக்கவே பயன்படுகிறது. 27 விழுக்காடு அளவுதான் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கப் பயன்படுகிறது.

இதுவரையிலான அரசுத் திட்டங்கள் அனைத்தும் கிடைக்கும் நீரைப் பயன்படுத்துவதற்காகத் தான் போடப்படுகின்றன. இயற்கையில் கிடைக்கும் நீரைக் கையகப்படுத்தி உடனடித் தேவைக்குப் பயன் படுத்துவதற்கான போட்டி, பல குமுகாய மோதல்களை விளைவித்திருக்கின்றன. மிகுந்து வரும் நகர்ப்புறத் தேவைகளும், ஆலைகளுக்கான தேவைகளும், நகர்ப்புற, மற்றும் ஆலைக் கழிவுப் பொருள்களைக் குவித்து நல்ல நீரை மாசுபடுத்தும்வதும், நிலத்தடி நீர் கீழே போவதும், பாசனப் பரிமாற்ற முறைகளின் கீழான நிலையும் இந்தப் போட்டியையும் மோதலையும் அதிகப்படுத்தி வருகின்றன.

ஆனால் இயற்கையில் கிடைக்குப் நீரைப் பாதுகாக்கவும் நீர்நிலைகளைச் சீர்திருத்தவும், பரிமாறுதல் முறையை மேலும் திறனுடையதாக்கவும், நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கவும், மழைபொழிவதைக் கூடுதலாக்குவதற்கான இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும் செய்யப்பட வேண்டிய முயற்சிகள் இல்லையென்றே சொல்லலாம். அரசின் காடு வளர்ப்புத் திட்டங்கள் ஊழல் மலிந்து செயலிழந்து போய் விட்ட அதே சமயம் கேடு விளைவிக்கக் கூடிய மர வகைகள் நடப்படுகின்றன. புதிய காடுகளை வளர்க்கும் திட்டத்தைப் பார்க்கிலும் அழிக்கப்படும் அளவே அதிகமாக உள்ளது.

வறட்சியிலும் பஞ்சத்திலும் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக நீர் வளத்தைப் பாதுகாத்து மேம்பாடடையச் செய்யும் குமுக - சுற்றுச் சூழல் அமைப்பு முறைகள், இந் நாட்டில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. ஒவ்வொரு கம்மத்திலும், நகரத்தைச் சுற்றியும் குடிநீர், பாசன மற்றும் கால்நடைகளின் தேவைக்காகக் குளம் குட்டைகள் வெட்டிப் பராமரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவை அவ்வப் பொழுது ஏற்படும் தேவைகளுக்கு மட்டுமின்றி நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கவும் உதவின. குளம் குட்டைகளைச் சுற்றி மரங்கள் வளர்க்கப்பட்டதோடு, ஒவ்வோர் ஆண்டும் அவை தூர் வாரப்பட்டு வண்டல் மண் பயிர் நிலங்களில் பயன்படுத்தப்பட்டன. குமுகப் பொதுக் காடுகள், புறம் போக்குகள், மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன.

தொடக்கக் காலந் தொட்டு, அமைப்பு முறைகள் இந்தியாவில் இருந்தன. ஒன்று போர்த் தொழிலுக் கான படைத்துறை. மாற்றொன்று நீர்ப்பாசனத்தை ஆளுமை செய்யும் சிற்றூர்ப்புற குமுக அமைப்பு. குடியமர்த்த ஆட்சியின் போது நீர்ப்பாசன ஆளுமை அமைப்புமுறை தகர்க்கப் பட்டதோடு, அந்தப் பணி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. 1947 - அதிகார மாற்றத்துக்குப் பிறகு அதிகாரப் பிரிவினரிடம் நீர்ப்பாசன ஆளுமைப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது.

இதன் விளைவாகக் கடந்த 2, 3 நூற்றாண்டுகளாக நீர்வளப் பாதுகாப்பு புறக்கணிக்கப்பட்டது. புதிய உரவகைகளைச் சார்ந்திருப்பதால் தூர் வாரி வண்டல் மண் கொண்டு நிலத்தை வளப்படுத்துவதும் கைவிடப்பட்டது.

எனவே, கொஞ்சம் மழை பொய்த்தால் கூட வறட்சி தாக்கக் கூடிய ஏதம் (ஆபத்து) கடுமையாகிறது. ஏனெனில் குளம் குட்டைகள் நீண்ட நாள்களுக்குத் தேக்கி வைக்கும் கொள்ளளவை இழந்தன. ஒப்போலைக் கட்சிப் பெருமகர்கள் பெரும்பாலான குளம் குட்டைகளைக் கையகப் படுத்திக் கொண்டு விடுவதால், மேலும் சிக்கல் அதிகமாகி வருகிறது. அவர்கள் வண்டல் மண்ணை எடுக்க விடுவதில்லை. ஆகவே வேளாண்மை நிலங்களின் மேற்பரப்பை மட்டும் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதால் மண் சாரமிழந்து போய்விடுகிறது. இதனாலும் வளமிகு விளை நிலம் பாலைநிலமாகிறது.

தமது பரம்பரை ஆட்சியை நிலைநாட்டிக் காத்துக் கொள்வதற்காக நேரு - இந்திரா - இராசீவ் குடும்பம் பின்பற்றிய- பின்பற்றும்- போலிச் சமநிலை அழிவுக் கொள்கைகளின் விளைவே இந்த நிலைமை...

சரியான புரட்சியின் பட்டறிவுகளைப் பெற்று மக்கள் விழிப்புறும் போது, இந்தப் போலிச் சமநிலை ஒப்போலைக் கட்சிகளையும் புரட்சி வெள்ளத்தில் தூக்கியெறிவர். —மாணிக்க வாசகம்

நன்றி: புதிய சனநாயகம்: 1-15 செப். '81

Scanned with CamScanner

தரங்கெட்டோர்!

-தரங்கை பன்னீர்ச்செல்வன்

1. பீநாறும் ஆரியத்தின் பித்தலாட்ட அரசியலைப்
பெரியதாய்ப் பீற்றித்,
தீநாக்குத் "தேசியங்கள்" தெளித்திட்ட உமிழ்
தேனுய் நக்கி, [நீரைத்
மாநாய்கன் மகள்கொழுநன் மதுரையினை நம்பி
மாய்ந் தனைப்போல் [யன்று
ஓநாய்க்கும் ஆட்டுக்கும் ஒப்பந்தம் செய்தனவே
ஊழல் மாக்கள்!

2. மனைவிற்று மதுவருந்தி மகிழ்கின்ற கயவனைப்
மானம் விற்றுத் - [போல்
தனைவிற்றுத் தன்மானத் தமிழீழ உரிமை
தாவி நிற்கும் [விற்றுத்-
வினையற்ற அமிர்தலிங்க வெறுஞ்சட்டிச் சுரண்டி
விழல்நீர் பாய்ச்சித் [யர்கள்
தினைகுற்றி உமியெடுத்துத் தின்கின்ற ஒப்பந்தம்
தீப்பந் தந்தான்!

3. காழ்ச்சிந்தைத் தமிழ்மறவர் கைப்படையை
கைச்சாத் திட்டே [இழப்பதெனக்
வீழ்ச்சிக்கே இப்போதும் வித்திட்டார்; ஆரியர்தம்
வெல்லப் பேச்சுச்
சூழ்ச்சிக்கே இரையானார்; சோற்றுக்கே விலை
சொந்த ஈழத் [யானார்;
தாழ்ச்சிக்கோ எண்ணற்ற தமிழவுயிர் காவு
தரங்கெட் டோரே! [தந்தார்;

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இங்கும் சரி அங்கும் சரி, தமிழின மக்களிடம் இந்திய அரசு நடந்து கொள்ளும் முறை கொடுமை! கொடுமை! இதற்கெல்லாம் காரணம் தமிழ் நாட்டில் தமிழரைக் காக்கின்ற அரசாக அமையாமல், காட்டிக் கொடுக்கின்ற அரசாகவன்றோ அமைந்திருக்கிறது! மொத்தத்தில் இங்குள்ள தலைவர்களின் தந்நலப் போக்கினால்தான் தமிழ்மக்கள் மிகவும் துயர்ப்பட வேண்டியுள்ளனர். அவர்களின் முயற்சி காலம் கருதியதாக இருப்பின், தமிழினத்திற்கு ஒரு விடிவு எப்பொழுதோ தோன்றியிருக்கும். அவ்விடிவு தமிழ்நாடு தனியாகப் பிரிவதே! 0

0 இங்குள்ள தலைவர்களின் தந்நலப் போக்கினால்தான் தமிழ்மக்கள் மிகவும் துயர்ப்பட வேண்டி உள்ளனர்!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 11

மக்கள் நலம், ஞாயம், நேர்மை, பொருளியல் அனைத்தும், அரசியலில் அடங்கிப் போய் விட்டால் நடப்பது கொடுமையே!

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண். 92. TN/MS (C) 657

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5